சுருக்கம்

தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற ஆதார முறையில் பணிபுரியும் 24 பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் பொருட்டு நிதி ஒதுக்கீடு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (சி.1) துறை**

அரசாணை (டி) எண்.179

நாள்.6.02.2015
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய, தை 23

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.305, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்.31.10.2012.
2) அரசாணை (டி) எண்.1122, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்.15.10.2013.
3) மருத்துவக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.38354/நி4/3/2014, நாள்.18.08.2014.

====

**ஆணை**

மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்ட மற்றும் பழைய பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டிடங்களை பராமரிக்க தனி ஒப்பந்ததாரர் மூலம் புற ஆதார முறையில் பணியாளர்களை நியமித்து கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் டெக்ஸ்கோ மூலம் பணியமர்த்தப்பட்ட ஓட்டுநருக்கு ஊதியம் வழங்க ஏதுவாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் புற ஆதார முறையில் அக்கல்லூரி மருத்துவமனையில் பணிபுரியும் 24 பணியாளர்களுக்கு 2013–2014–ம் ஆண்டில் ஊதியம் வழங்கப்பட்டு வந்ததாகவும் 2014–2015–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு செய்யும்போது உரிய கணக்கு தலைப்பின்கீழ் உள்ள உள்தலைப்பில் நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை என்றும் ஆனால் சென்ற 2013–2014 ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் மற்றும் இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒப்பந்த ஊதியம் என்ற உட்தலைப்பில் ரூ.10797/– ஆயிரங்கள் வழங்கப்பட்டிருந்தது என்றும், இதனால் மேற்படி பணியாளருக்கு மார்ச் 2014 முதல் ஊதியம் பெற்றுத் தர இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் முதல்வர் தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2. எனவே, மருத்துவக் கல்வி இயக்குநர் தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற ஆதார முறையில் பணிபுரியும் 24 பணியாளர்களுக்கு மார்ச் 2014 முதல் ஜுன் 2014 வரை வழங்கவேண்டிய ஊதிய நிலுவைத் தொகையான ரூ.7,26,578/– மற்றும் ஜுலை 2014 முதல் மார்ச் 2015 வரை மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க ஏதுவாக ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தொகை ரூ.17,45,108/– ஆக மொத்தம் ரூ.24,71,686/– உரிய கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கோரிக்கையினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து அதனை ஏற்று தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற ஆதார முறையில் பணிபுரியும் 24 பணியாளர்களுக்கு மார்ச் 2014 முதல் ஜுன் 2014 வரை வழங்கவேண்டிய ஊதிய நிலுவைத் தொகை மற்றும் 2015–16ம் ஆண்டிற்கு ஊதியம் வழங்க ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய

தொகை ஆக மொத்தம் ரூ.24,71,686/– (ரூபாய் இருபத்துநான்கு இலட்சத்து, எழுபத்தோறாயிரத்து அறுநூற்று எண்பத்தாறு மட்டும்) அட்டவணையில் உள்ளவாறு நிதி ஒப்பளிப்பு செய்யலாமெனக் கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது:

"2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் 01 நகர்ப் பகுதி சுகாதாரப் பணிகள் ஆங்கில முறை மருத்துவம் 110 மருத்துவமனைகளும் மருந்தகங்களும் I – திட்டத்தில் சேராதது – AX அரசு பல் மருத்துவக் கல்லூரியும் மருத்துவமனையும் 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் 04 ஒப்பந்த ஊதியம் (கூ தொ கு. 2210–01–110–AX–3349)"

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2014–2015 ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2014–2015 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2014–2015ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(சுகாதாரம்–II)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.52951/சுகாதாரம்–II/2014, நாள்.16.10.2014ன் இசைவுடன் மற்றும் கூடுதல் பேரேட்டு எண்.2382 (இரண்டு ஆயிரத்து முந்நூற்று எண்பத்து இரண்டு) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10.
முதல்வர், தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை–3.
மாநில கணக்காயர் (கணக்கு மற்றும் வருவாய்), சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–3.

நகல்
நிதித் (சுகாதாரம்–II/வ.செ.2) துறை, சென்னை–9.
தரவு பிரிவு, இ.கோ/உ.நி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## ANNEXURE

## (G.O.(D) No.179, Health and Family Welfare(C1) Department Dated: 6.02.2015

## Tamil Nadu Government Dental College & Hospital, Chennai-3

| Sl. No. | Period | Agency Name | Amount |
|---|---|---|---|
| 1. | 1.03.2014 to 15.06.2014 (23 Employees) | Hi Power Enterprises | 5,76,868/- |
| 2. | 1.03.2014 to 31.05.2014 (1 Employee) | Texco Driver | 75,786/- |
| 3. | 16.06.2014 to 31.05.2014 (23 Employees) | Yoga Man Power Agency (1330632+73924) | 14,04,556/- |
| 4. | 1.06.2014 to 31.03.2015 (1 Employee) | Texco Driver | 2,55,830/- |
| | Increase of 10% for Sl.No.3&4 (1330632+255830=1586462x10%) | | 1,58,646/- |
| | Total | | 24,71,686/- |

(Rupees twenty four lakhs seventy one thousand six hundred and eighty six only)

DR.J.RADHAKRISHNAN
SECRETARY TO GOVERNMENT

// true copy //

Section Officer